**தலைப்பு – 266 வவுனியா மாவட்டச் செயலகம்**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

வவுனியா மாவட்ட செயலகத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் வவுனியா மாவட்ட செயலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளையும் அவதானிப்புக்களையும் உள்ளடக்கிய பொழிப்பறிக்கை 2023 மே 25 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் விரிவான வருடாந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2023 !ன் 26 இல் கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாரளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக்கூற்றுக்களில் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வவுனியா மாவட்ட செயலகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று இன்றி நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் ஆகியன கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில்

நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் அதனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

நிதிக்கூற்றுக்கள், ஒட்டுமொத்தமாக மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் வழங்குதல் மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மை தொடர்பில் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு அவற்றை பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்களின் மீது இவ்விடயம் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம், கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும்,என்னால்

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்காக அடிப்படையொன்றினை பெற்றுக்கொள்ளும் போது,மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணல் மற்றும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டன. பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதற்கு, அவை தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் ஆகியவற்றால் ஏற்படுகின்றமை காரணமாக அமைகிறது.

- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் அபிப்பிராயமொன்றினை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாது, சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதற்காக உள்ளக கட்டுப்பாடு தொடர்பில் புரிந்துணர்வொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மற்றும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் ஒட்டுமொத்தமாக மதிப்பீடு செய்யப்பட்டன.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் நான் பின்வரும் விடயங்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) முன்னைய ஆண்டிற்குரியதாக நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

**(அ) ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் மாவட்டச் செயலகம் மற்றும் 04 பிரதேச செயலகங்களினால் பாவனையிலிருந்து அகற்றப்பட்டிருந்த 484 இருப்புப் பொருட்கள் மற்றும் மாவட்ட செயலகத்தில் அகற்றப்பட்ட 2670 சதுர அடி உடைய கட்டடம் என்பவற்றின் கிரயமானது நிதியல்லாச் சொத்துக்களிலிருந்து நீக்கப்பட்டிருக்கவில்லை. | மாவட்ட செயலக கட்டிட தொகுதியை தனித்தனியாக மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. இதன் பின்னர் இங்கு அழிக்கப்பட்ட 2670 சதுர அடி கட்டிடத்திற்கான மதிப்பீட்டு பெறுமதி CIGAS இலிருந்து நீக்கப்படும். | அகறறப' பட்டிருந்த நிதியல்லாச் சொத்துக்களின் கிரயமானது நிதிக்கூற்றிலிருந்து நீக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

**(ஆ) பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாவட்டச் செயலகத்தினால் மின்சார பொருத்துப் பதிவேடு இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணம் 454(2) இன் பிரகாரம் நாளதுவரையில் முறையாக பேணப்பட்டிருக்கவில்லை. | மாவட்ட செயலகத்தினால் இலங்கை சனநாயக சோஷலிச குடியரசு அரசாங்கத்தின் நிதி பிரமாணம் 454(2) இன் பிரகாரம் மின்சார பொருத்துக்களின் பொருட்பதிவேடு இதுவரை காலமும் முறையாக பேணப்பட்டிராத போதிலும் இனிவரும் காலங்களில் இப்பதிவேடு உரிய பிரமாணங்களின் படி முறையாக பேணப்பட நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப்பிரமாணங்களில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் முறையாக பதிவேட்டினை பேண நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 ஏனைய அமைச்சுக்கள், திணைக்களங்களால் வழங்கப்பட்ட நிதியேற்பாடுகளின் பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் 10 அமைச்சுக்கள் மற்றும் 05 திணைக்களங்களினால் வழங்கப்பட்டிருந்த கூட்டுமொத்தம் ரூபா 234,442,571 நிதி ஒதுக்கீடுகளில் கூட்டுமொத்தம் ரூபா 234,169,769 பயன்படுத்தப்பட்டிருக்காது 18 சதவீதம் தொடக்கம் 100 சதவீதம் வரையான வீச்செல்லையில் சேமிக்கப்பட்டிருந்தது. | நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி காரணமாகவும் வரவு செலவு திட்ட சுற்றுநிருபத்திற்கு இணங்கவும் விடுவிக்கப்பட்ட ஒதுக்கீட்டில் மிகுதி காணப்பட்டது. | குறிக்கோள்களை நிறைவேற்றக்கூடியவாறு நிதி ஏற்பாடுகளை பயன்படுத்தபடுவதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். |

#### 2.1.1 கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரால் மாவட்ட செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக இலகுவான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்வதாக கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வு செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையினை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்களை செய்யப்பட வேண்டிய போதிலும் அம்மீளாய்வுகள் எழுத்து மூலம் மேற்கொள்ளப்பட்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறான மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டதாக கூற்றொன்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | இனி வரும் காலங்களில் நடவடிக்கைகள் எடுக்கப்படும். | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் பிரகாரம் ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

### 2.1.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 109 இன் பிரகாரம் வவுனியா வடக்கு பிரதேச செயலகத்தினது வாகன விபத்தாலெழுந்திருந்த இழப்புக்களின் பெறுமதி கூட்டுமொத்தம் ரூபா 217,500 இனை பொறுப்பாக்கப்பட்டிருந்த வாகன சாரதிகளிடமிருந்து அறவிட்டுக் கொள்வதற்கு கடந்த 13 ஆண்டுகளாக ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டு மே மாதம் தொடக்கம் சாரதியின் சம்பளத்திலிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | இழப்புக்களை உரியவாறு சீர்செய்யப்படுவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

### 3.1.1 எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டம் அடையப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2017 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சின் கர்ப்பிணி தாய்மார்களுக்கான ரூபா 2,000 மாதாந்தம் வழங்கும் போசாக்கு திட்டத்திற்கு மேலாக மீளாய்வாண்டில் மகளிர் சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்தல் அமைச்சின் 2022 ஒக்தோபர் 14 ஆம் திகதிய மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் சுற்றறிக்கை 6/2022 இன் பிரகாரம் பாலுாட்டும் தாய்மார்களுக்காக ரூபா 2,500 மேலதிக கொடுப்பனவுத் தொகை 2022 ஆம் ஆண்டு செப்தெம்பர் மாதம் முதல் திசெம்பர் மாதம் வரையான 4 மாத காலத்துக்கு கொடுப்பனவு செயல்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதுடன் அமுல்ப்படுத்தல் மற்றும் கண்காணிக்கும் பொறுப்பு மாவட்ட செயலாளருக்கும் பிரதேச செயலாளருக்கும் ஒப்படைக்கப்பட்டுள்ளது. எனினும் நிறை குறைந்த பிள்ளைகளின் பிறப்பு எண்ணிக்கை 2020, 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் முறையே 236, 245 மற்றும் 290 ஆக அதிகரித்து செல்வது அவதானிக்கப்பட்டுள்ளது. | கர்ப்பிணித் தாய்மாரின் விண்ணப்பப் படிவம் சுகாதார வைத்திய அதிகாரி, பொது சுகாதார மருத்துவமாது, கிராம நிலதாரி போன்றோரின் கையொப்பங்கள் பெறப்பட்டு உரிய காலத்தில் பிரதேச செயலகங்களுக்கு கையளிக்கப்படுவதில்லை. மேலும் முத்திரைக்கான விண்ணப்பங்கள் வழங்கப்பட்டும் அவற்றை விநியோகிப்பதில் தாமதங்கள் ஏற்படுகின்றது. | சுற்றறிக்கை உரிய முறையில் அமுல்படுபத் தப்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.1.2 எதிர்பார்க்கப்பட்ட நலன்கள் பெற்றுக்கொள்ளப்படாமை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | இராஜாங்க அமைச்சின் கிராமிய வீடமைப்பு மீள் எழுச்சி திட்டத்தின் மூலம் பெறப்பட்டிருந்த நிதியிலிருந்து 2610 குடும்பங்களுக்கு 2015 ஆம் ஆண்டு நிர்மாணித்து வழங்கப்பட்ட வீடுகளில் நாளதுவரை 64 வீடுகள் குடியிருப்புக்காக உபயோகிக்கப்பட்டிராது கைவிடப்பட்டிருந்தன. | பிரசுரங்கள் ஒட்டப்பட்டு பயனாளிகளை குடியிருக்க வைப்பதற்கான முயற்சிகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. | வீடுகள் கையளிக்கப்பட்டிருந்த பயனாளிகள் அங்கு குடியிருந்து உரிய நோக்கத்திற்கு உபயோகிக்கப்படுவதனை உறுதிப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |
| (ஆ) | 2018 ஆம் ஆண்டு வரவு செலவு திட்ட முன்மொழிவுக்கு அமைய கூட்டுமொத்தம் ரூபா 291,639,356 கிரயத்தில் நிர்மாணிக்கப்பட்டிருந்த வவுனியா பொருளாதார மத்திய நிலையம் நாளதுவரை மக்களின் பாவனைக்கு விடப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும் அதற்குரிய பாதுகாப்புச் சேவைக் கட்டணம், சுத்திகரிப்பு மற்றும் நீர்க் கட்டணங்கள் கூட்டுமொத்தம் ரூபா 5,865,128 கடந்த 05 ஆண்டுகளாக செலுத்தப்பட்டிருந்தன. | கிராமிய பொருளாதார அலுவல்கள் அமைச்சின் அனுமதி கிடைக்கப்பெற்றதும் பயன்பாட்டுக்கு உட்படுத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் | உரிய நோக்கத்திற்கு பயன்படுத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

### 3.1.3 செயற்திட்டத்தை நிறைவேற்றுவதில் தாமதம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நேர் முன்னைய வருடத்தில் வவுனியா மாவட்டத்துக்கு மீள்குடியேற்ற அமைச்சினால் வழங்கப்பட்ட 456 மலசலகூட அமைத்தல் வேலைக்குரிய நிதி ஒதுக்கீட்டில் வெங்கல செட்டிகுளம் பிரதேச செயலகத்தினால் கூட்டுமொத்தம் ரூபா 700,000 பெறுமதியான ஒதுக்கீடு செய்யப்பட்ட 10 மலசலகூடங்கள் நாளதுவரை நிர்மாணிக்கப்பட்டிருக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | கட்டுநதி கிடைக்கப்பெற்றதும் முடிவுறுத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் | கட்டுநிதியைப் பெற்று விரைவில் மலசல கூடங்களை நிர்மானித்துக் கொள்வதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். |

### 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### 3.2.1 பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாக பயன்படுத்தப்படும் சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாவட்டச் செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களில் 19 மோட்டார் சைக்கிள்கள் பயன்படுத்தப்படாமலும் திருத்தம் செய்து பயன்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்காது பாதுகாப்பு மற்றும் பராமரிப்பின்றி கடந்த 02 தொடக்கம் 07 வருடங்களாக தரிப்பிடத்தில் விடப்பட்டிருந்தன. | உரிமை மாற்றம் செய்த பின்னர் மீளவும் உத்தியோகத்தர்களுக்கும் ஏனைய திணைக்களங்களுக்கும் வழங்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வாகனங்களின் பயன்பாடு தொடர்பில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |

### 4. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளுதல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்களையும் இலக்குகளையும் அடைந்து கொள்ளும் பொருட்டு மாவட்டச் செயலகத்தினால் நிறைவேற்றிக் கொள்ளக்கூடிய இலக்குகள் மற்றும் அந்த இலக்குகளை அடைந்து கொள்வதில் நிலவும் இடைவெளிகளின் செயன்முன்னேற்றத்தை அளவிடுவதற்கான பொருத்தமான குறிகாட்டிகள் உருவாக்கப்படுவதற்கு மாவட்டச் செயலகத்தினால் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் காலங்களில் உரிய குறிகாட்டிகள் உருவாக்கப்பட்டு நிறைவேற்றப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |

### 5. மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| சிரேஷ்ட நிலை மற்றும் மூன்றாம் நிலைகளில் முறையே 4 மற்றும் 5 வெற்றிடங்கள் காணப்படுவதன் காரணமாக செயலகத்தினால் சிறந்த சேவைகளை மக்களுக்கு ஆற்றமுடியாமல் இருக்கும் என்பதுடன் இவற்றை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சிரேஸ்ட நிலை மற்றும் மூன்றாம் நிலைகளில் காணப்படும் வெற்றிடங்கள் தொடர்பில் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளுராட்சி அமைச்சிற்கு மாதாந்தம் தரவுகள் உள்ளீடு செய்யப்படுகிறது. | வெற்றிடங்களை விரைவில் நிரப்பி மக்களுக்கு சிறந்த சேவையினை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |